



# ஹர ஹர சங்கரா



FREE COPY
April - 2025
Vol. 4 - ISSUE 06

# KODAMBAKKAM TIMES

# காயேன வாசா மனஸேந்த்ரியை வா:

இன்று நாம் காண இருப்பது எந்தப் பூஜையோ, ஸம்ஸ்காரங்களோ அவற்றின் முடிவில் நமது ஆத்மார்த்த சமர்ப்பணத்தை இறைவனிடம் சொல்லிக் கொள்கின்ற ஒரு ஸ்லோகம்.

"விஷ்ணு சஹஸ்ரநாம" பாராயணத்தின் முடிவில் வருகின்ற அதே ஸ்லோகம்தான்.

"காயேன வாசா மனஸேந்த்ரியைர்வா புத்த்யாத்மனா வா ப்ரக்ருதேஸ்ஸ்வபாவாத்
கரோமி யத்யத்ஸகலம் பரஸ்மை நாராயணாயேதி ஸமர்பயாமி"

இந்த ஸ்லோகத்தைப் பதம் பிரித்து அதன் பொருள் : காயேன - உடலாலோ, வாசா - வாக்கினாலோ, மனஸ் - மனதினாலோ, இந்த்ரியை (வா) - இந்த்ரியங்களினாலோ, புத்தி - அறிவினாலோ, ஆத்மனா (வா) - ஆத்மாவினாலோ, ப்ரக்ருதே ஸ்வபாவாத் - இயற்கையான குணவிஷேஸத்தினாலோ, யத்யத் - எதுஎதைச், கரோமி - செய்கின்றேனோ, ஸகலம் - அவை அனைத்தையும் பரஸ்மை நாராயணா இதி - பரமபுருஷனாகிய நாராயணனுக்கே ஸமர்ப்பயாமி - ஸமர்ப்பிக்கிறேன் (அர்ப்பணிக்கிறேன்) இப்படிச் சொல்லி முடிக்கின்றோம். இது வெறும் வாய் வார்த்தைக்காகச் சொல்வது அல்ல. உணர்வு பூர்வமாய்ச் சொல்ல வேண்டும்.



அதைச் சொல்கின்ற நாம் எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று ஒரு க்ஷணம் சிந்திப்போம். நமக்கு ப்ரியமானவர்களுக்கு ஒன்றைத் தரும் போது அதில் நாம் அசிரத்தையைக் காட்டுவோமா? பார்த்துப் பார்த்து அல்லவா தேர்ந்தெடுத்து அளிப்போம். அப்படி இந்தப் பிறவியோடு சம்பந்தம் முடிந்து போகின்ற உறவுகளுக்கே இவ்வளவு அக்கறை எடுக்கின்ற நாம், எத்தனையோ பிறவிகளாய் உறவில் சம்பந்தப் பட்டிருக்கும் அந்த இறைவனுக்கு ஒன்றை அளிக்கும் போது எவ்வளவு ஜாக்ரதையாக இருக்க வேண்டும்.

நாம் கொடுக்கின்ற நைவேத்யப் பொருட்களை அவன் எதிர்பார்ப்பதே இல்லை என்பதை நாம் அனைவருமே அறிவோம். அவை நம் ஆசைக்காக நாமே அவனுக்குக் கொடுப்பவை.


அவன் எதிர்பார்ப்பதெல்லாமே இந்த த்ரிகரண சுத்தியே (மனம், வாக்கு, காயம் என்ற முக்கரணத் தூய்மை). ஆத்மார்த்தமாக, ப்ரியத்தோடு நாம் தருகின்ற எதையும் ஏற்றுக்கொள்ள அவன் ஸித்தமாக இருக்கிறான். பகவத்கீதையில் கண்ணனின் திருவாக்கும் அதுதானே.

"பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி"

"ஒரு இலையோ, பூவோ, கனியோ, ஒரு துளி நீரோ எதை நீ ப்ரீதியோடும், பக்தியோடும் தருகிறாயோ அதை நான் அங்கீகரிக்கிறேன். இதுதான் மேற்கண்ட ஸ்லோகத்தின் பொருள். இவ்வளவு எளிமையானவனுக்கு இனிமையாய் நம்மையே அளிப்போமே.

# விரைவாக கயாவிற்குச் சென்று உங்கள் தாயாருக்காக ஷ்ரார்த்த நிகழ்வு நடத்துங்கள்

மதராசில் இருந்து வந்த ஒரு பக்தர், மந்திராலயாவில் ஸ்ரீ ராகவேந்திரர் பிருந்தாவனத்தின் தரிசனம் பெறுவதற்காக புனித யாத்திரையில், மும்பை மெயில் ரயிலில் பயணித்துக் கொண்டிருந்தார்.



அவருக்குத் தூக்கம் வந்தது, ரயில் ஒரு நிலையத்தில் நின்றபோது, அவர் அது தனது இடம் என்று நினைத்து தூக்கத்தில் அவசரமாக இறங்கிவிட்டார்.

மும்பை மெயில் ரயில் ரயில் நிலையத்தை விட்டுச் சென்ற பிறகே அவர் அந்த நிலையத்தின் பெயர் பலகையைப் பார்த்தார் அது குண்டக்கல் ரயில் நிலயம் என்று தெரிந்து கொண்டார்.

"அட தேவுடா" நான் இங்கே இறங்கிட்டேனா (தவறா)". அதே ரயிலில் வந்த ஸ்ரீமடம் பக்தர் ஜோஷியும் அவரது நண்பர்களும் குழப்பத்துடன் நின்றிருந்த அந்த பக்தரை சந்தித்தனர். அந்த நேரத்தில் பெரியவா ஹகாரியில் தங்கியிருந்தார். அவரைத் தரிசிக்கவே ஜோஷி மற்றும் அவரது நண்பர்கள் செல்லவிருந்தனர். "நான் தூக்கத்தில் இறங்கிட்டேன்" என்றார் அந்த "மந்திராலயா" பக்தர். "அது தூக்கம் இல்லை நீ தூய நினைவுடன் இங்கே இறங்கியுள்ளாய் வா நாம் ஹகாரிக்குச் சென்று பெரியவாளின் தரிசனம் பெறுவோம்", என்று ஜோஷி சொன்னார்.

ஜோஷி மற்றும் அவரது நண்பர்கள் மகா சந்நிதியில் வணங்கி பிறருக்கும் இடம் கொடுத்து ஒரு பக்கம் நின்றனர்.

பெரியவர் வழக்கம்போல அவரைச் சந்திக்க வந்த அனைவரிடமும் விவரங்களை விசாரித்தார். மந்திராலயா பக்தரின் முறை வந்தபோது, பெரியவா ஜோஷியிடம் கேட்டார். "இந்த மனிதர் இங்கே வர நினைக்கவில்லை, நீங்கள் இவரை அழைத்து வந்தீர்களா?" இதைக்கேட்டதும் மந்திராலயா பக்தர் பதற்றமாகினார்.

"நான் பெரியவாளின் தரிசனம் பெறாமல் நேராக மந்திராலயாவிற்குச் செல்ல நினைத்தேன். ஆனால் இப்போது இங்கே வர நேர்ந்தது..." என்று அவசரத்தில்

சொன்னார்.

பெரியவர் அவரை அருகே வரச் சொன்னார். நீண்ட நேரம் குறைந்த சத்தத்தில் பேசினார். அந்த பக்தர் தலையாட்டி ஒப்புக்கொள்வதை பார்த்தனர். அந்த பக்தரின் தாயார் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்துகொண்டார் என்பதும் வெளிவந்தது. அப்படியா?" என்று பெரியவா கேட்டார். "ஆமாம்", என்று குற்ற உணர்வுடன் பக்தர் கூறினார்.

"விரைவாக கயாவிற்குச் சென்று உங்கள் தாயாருக்காக ஷ்ரார்த்த நிகழ்வு நடத்துங்கள் அவருக்கு விடிவு கிடைக்கும்" என்று பெரியவாள் சொன்னார்.

பின்னர், மந்திராலயா பக்தர் நம்மிடம் வந்து பெரியவாளின் ஆலோசனையையும், கட்டளையையும் விளக்கினார்.

ஜோஷி சொன்னார் : "கிணற்றில் விழுந்து தன் உயிரை துறந்த அந்த பெண்ணின் ஆன்மா தனது தற்போதைய நிலையிலிருந்து விடுதலை பெற பெரியவரைப் பிரார்த்தித்து இருக்கும். அதனால்தான் பெரியவா அவரது மகனை குண்டக்கலில் இறங்க வைத்து தன்னிடம் வரச்செய்தார்".

இது உண்மையாக இருக்கலாம், இல்லையென்றால் மந்திராலயா பக்தரின் தாயாரின் திடீர் இறப்பு பற்றி பெரியவாளுக்கு எப்படி தெரிந்தது?

இந்த காசாய ராஜா ஆன்மாக்களின் மொழியையும் அறிந்தவராக இருந்தாரோ? நாம் என்ன அறிவோம்?

மஹாபெரியவா திருவடிகளே சரணம்

---

# 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை குடமுழுக்கு ஏன்



**முதல் மூன்று ஆண்டுகள் தெய்வம் கருவறையில் இருக்கும்**
**அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு தெய்வம் பலிபீடத்தில் இருக்கும்**
**அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு தெய்வம் கொடி மரத்தில் இருக்கும்**
**அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு தெய்வம் கோபுர கலசத்திற்கு செல்லும்**
**கோபுர கலசத்தில் இருக்கும் தெய்வத்தை**
**மீண்டும் கருவறைக்கு அழைத்து வரவே**
**12 ஆண்டுகளுக்கு ஒரு முறை குடமுழுக்கு செய்யப்படுகிறது.**

# உலகின் அனைத்து ரகசியமும் உன் உடலுக்கு உள்ளே

மந்திரம் தேடாதே ஒரு தந்திரமும் நாடாதே உன்னைத் தேடு. ஊர் ஊராக சுற்றாதே உன் உடலை சுற்று. ஊர் உனக்கு மகுடம் சூட்டி உத்தமன் என பட்டம் தந்தாலும், உடல் உன்னை கை விட்டால் உன் பட்டமும், உன் பதவியும் பிடி சாம்பலாகி விடும். புறத்தில் உன் குடும்பத்தை நேசித்தாய், அது உன் குடும்பம் என கண்டும் கொண்டாய், ஓடி ஓடி உழைத்தாய், உன் குடும்பத்திற்கு காவல் தெய்வமாக நின்றாய் ஆனால் உனக்கு காவல் தெய்வமாக, உன் உயிருக்கு காக்கும் கடவுளாக இருப்பது உன் உடலே.

அக குடும்பத்தை மறந்து விடாதே, உன் உயிருக்கு காக்கும் கடவுளாக இருப்பது உன் உடலே. உன் அக குடும்பம் சரியில்லை என்றால் சூரிய குடும்பத்தில் நீ இருக்க இயலுவதில்லை.



உன் உள் குடும்பம் உன் உடலே அதை மறந்தால் உன் வெளி குடும்பம் கதறினாலும் உன்னை காக்கவும் யாரால் முடியும். மற்ற உயிர்களுக்கு ஒருவன் செய்யும் பாவத்திற்கு விமோசனம் உண்டு. ஒருவன் அவன் உடலுக்கே செய்யும் பாவத்திற்கு விமோசனம் இல்லை காரணம் அந்த உடல் அவன் உயிருக்காகவே சிறப்பு மிக்க வரமாக கொடுக்கப்பட்டதால். உடலுக்கு ஒருவன் செய்யும் தொண்டே பூஜை. உடலுக்கு உள் சென்று உனக்காக உழைக்கும் உறுப்புகளை வணங்குவதே ஆலயம் சென்று வணங்குவதை விட உயர்வானது. உடல் அனுமதித்தால் தான் ஒருவன் சித்தனும் ஆக முடியும்.

You can advertise for your Rental, Real Estate, Situation Vacant etc.,

**KODAMBAKKAM TIMES**

**MAMBALAM & T NAGAR EDITION**

COVERING AREA : Choolaimedu, Kodambakkam, Mambalam & T Nagar

**K K NAGAR & VADAPALANI EDITION**

COVERING AREA :

Ashok Nagar, Ramapuram, Virugambakkam & Valasaravakkam

**044 2484 4114 / 93826 82128 / 89390 70034**

E-mail : kodambakkamtimes@yahoo.com

ஒருவன் எப்படிபட்டவன் ஆக வேண்டும் என்று தீர்மானிப்பது அவனின் எண்ணங்களே. ஆனால் அந்த எண்ணங்களை தீர்மானிப்பது உடலே. ஒருவன் எதுவாக ஆக விரும்புகிறானோ அதை தீர்மானிப்பதும் உடலே. ஒருவன் உண்ணும் உணவும், பேணி காக்கும் உடலும் அழைத்து செல்லும் அதனதன் தன்மைக்கு ஏற்ப.

ஒருவன் அவன் உள் குடும்பமான உடலை கவனித்தால் அந்த உள் குடும்பமே உன் வெளி குடும்பத்தை காக்கும். பிறந்த ஒவ்வொருவருக்கும் அவரவர் குலத்தின் குலதெய்வம் அவரின் உடலே. உலகின் அனைத்து ரகசியமும் உன் உடலுக்கு உள்ளே. தியானம் நம் மனதோடு பேச செய்யும், ஆசனம் நம் உடலோடு பேச செய்யும் அதை தேடு. இந்த தத்துவத்தை திருமூலர் தன்னுடைய திருமந்திரத்தில் தெள்ளத்தெளிவாக சொல்லுகிறார். தன் உடலை காக்காதவன் புழுவாய் புழு புழுத்து இறப்பார் என்று கூறியுள்ளார்.

# "மா கேலரா விசாரமு"?

"தான் வைகுண்டம் போகும் பொழுது ராமர் தன்னோடு இருந்த அத்தனை ஜீவராசிகளையும் சேர்த்தே வைகுண்டம் அழைத்துக் கொண்டு போனார்".

"ராமருக்காகவே பிறந்தவர்னு சொல்லணும்னா குலசேகர ஆழ்வாரைத்தான் சொல்லணும். அவர் அப்படி ராமரை ஆராதிச்சிருக்கிறார் பாசுரங்களால்.



குலசேகர ஆழ்வாரும் புனர்பூசம், ராமரும் புனர்பூசம் என்ன பொருத்தம். "எங்கள் குலத்து இன்னமுதேன்னு பிரபந்தத்துல குலசேகர ஆழ்வார் தாலாட்டிப் பாடற மாதிரியேதான் தியாகராஜரும் ராமரை தாலாட்டி இருக்கார்.

"ஒய்யார லோக வையானு" ராமரைத் தாலாட்டற அழகு இருக்கே தியாகராஜர் தன்னோட ஒவ்வொரு பாட்டு வழியாகவும் ராமரோடவே பேசியிருக்கார்.

சீதையை, ராவணன் அபகரிச்சுண்டு போனப்புறம் ராமர் அழறார். அங்கு இருக்கின்ற ஒவ்வொரு புல்லுகிட்டேயும், பூக்கிட்டேயும், "என் சீதை எங்கே, எங்கே?ன்னு கேட்டுக் கதறுகிறார். இதில் ஒரு பூ தெற்கு பக்கமா தன் தலையைத் திருப்பிக்கிறது கோதாவரியைப் பார்த்து. அதுக்கு நன்றாகத் தெரியும் ராவணன்தான் சீதையைத் தூக்கிக்கொண்டு போனான்னு. ஆனாலும் ராவணனுக்குப் பயந்து அது வாயே திறக்கல.

அதனால் அந்தக் காலப் பெரியவர்கள் "ராமர் கேட்ட பொழுது சீதை எங்கேன்னு கோதாவரி சொல்லல. அது எப்படி புண்ணிய நதியாகும்"னு கேட்பார்கள். ஆனால், ஸ்வாமி தேசிகன் சொல்றார் "அதோட பேர்ல கோதா அதாவது ஆண்டாள்னு

இருக்கே, அதனால கோதாவரியை மன்னித்து விடலாம்னு.

ராமாயணத்துலேயே ரொம்ப டென்ஷனான பேர்வழி யார்னு பார்த்தா அது சுக்ரீவன்தான். தன்னோட மனைவியை வாலி தூக்கிண்டு போய்ட்டானே. அவ எப்போ கிடைப்பான்னு புலம்பித்தள்றார். அதைக் கேட்டுவிட்டு ஹனுமார் வாக்கா தியாகராஜர் சொல்றார்: "ஹே அப்பா, க்ஷீர சாகரத்துல இருப்பவரை நினை அவர் உனக்கு ஓடோடி வந்து உதவி புரிவார்னு கூறி "க்ஷீர ஸாகர சயனா" பாடறார்.

உடனே சுக்ரீவன் ஹனுமாரிடம், "அவர் மனிதர்களுக்குதான் உதவி பண்ணுவார் என்னைப் போன்ற மிருகங்களுக்கு எப்படி உதவி செய்வார்னு கேட்கிறான். "அதெல்லாம் இல்லை. அவர் எல்லா உயிர்களுக்குமே உதவி பண்ணுவார் என்கிறார். அப்போ ராமரும் லக்ஷ்மணரும் சேர்ந்து வருகிறார்கள். ராமர் ஹனுமாரைப் பார்த்து, "நீ யாருப்பா?"ன்னு கேட்க, "நான் சுக்ரீவனின் மந்திரி ஹனுமார்னு பேர்." ஹனுமார் பேச்சில் மனம் லயித்த ராமர் லக்ஷ்மணரிடம், "நான்கு வேதங்கள் கற்றவன் கூட இப்படிப் பேச முடியாது என்னமா பேசறான் இவன். அவன் பேசற வார்த்தையிலேயே என்னைக் கவர்ந்துவிட்டான் என்கிறார். தியாகராஜரோ, "ராமா ஹனுமார் மாதிரி நான் படிக்கலேன்னு என்னைப் பற்றி நீ ஒண்ணுமே சொல்லாம இருக்கியா? நான் வந்தா என்கூட நீ பேசவே மாட்டியா ராமா? எனக் கேட்கிறார். "ஆட மோடி கலதே ராமய்யா, மாடலாடி ஆட மோடி கலதே"ங்கறார். என்னோட பேச வான்னு அவர் பாடற அந்த வரில எப்படி ஒரு பக்திப் பரவசம்.

சுக்ரீவன் ஓடிவந்து ராம, லஷ்மணரை வரவேற்று, "உன் பத்னியை மீட்பதில் நான் உதவி புரிகிறேன். என் பத்னியை மீட்க நீங்கள் உதவி புரிய வேண்டும்" என்கிறார். இதுதான் ராமாயணத்தோட இன்டர்வெல்லே. இங்கே ஒரு சஸ்பென்ஸ் இருக்கு, சுக்ரீவனோட இருந்த 70,000 குரங்குகளும், "நாம் நிச்சயம் போர்ல ஜெயிச்சுடுவோமா?ன்னு சந்தேகம் பொங்கக் கேட்டதாம். சுக்ரீவன் டக்குனு, "எனக்கு எதுக்கு கவலை? என்கிறார் தைரியமாக. அதையே தான் தியாகராஜரும், "மா கேலரா விசாரமு?" நான் எதுக்கு விசாரப்படணும் அப்படீன்னு கேட்கறார்.

பகவான் மேலே நம்பிக்கை உறுதியாயிட்டா, விசனம் எதுக்கு கவலைங்கறதே இல்லைதானே.

# ஸ்ரீ ராமரின் 68 தலைமுறை முன்னோர்கள்

1. பிரம்மாவின் மகன் - மரீசீ
2. மரீசீயின் மகன் - கஷ்யபர்
3. கஷ்யபரின் மகன் - விவஸ்வான்
4. விவஸ்வானின் மகன் - மனு
5. மனுவின் மகன் - இஷ்வாகு
6. இஷ்வாகுவின் மகன் - விகுக்ஷி
7. விகுக்ஷியின் மகன் - புரண்ஜயா
8. புரண்ஜயாவின் மகன் - அணரன்யா - 1
9. அணரன்யாவின் மகன் - ப்ருது
10. ப்ருதுவின் மகன் - விஷ்வாகஹா
11. விஷ்வாகஹாவின் மகன் - ஆர்தரா
12. ஆர்தராவின் மகன் - யுவான்ஷ்வா -1
13. யுவான்ஷ்வாவின் மகன் - ஷ்ரவஷ்ட்
14. ஷ்ரவஷ்டின் மகன் - வ்ரதஷ்வா
15. வ்ரதஷ்வாவின் மகன் - குவலஷ்வா
16. குவலஷ்வாவின் மகன் - த்ருதஷ்வா
17. த்ருதஷ்வாவின் மகன் - ப்ரோமத்
18. ப்ரோமத்தின் மகன் - ஹர்யஷ்வா - 1
19. ஹர்யஷ்வாவின் மகன் - நிகும்ப்
20. நிகும்பின் மகன் - சன்டஷ்வா

21. சன்டஷ்வாவின் மகன் - க்ருஷஸ்வா
22. க்ருஷஸ்வாவின் மகன் - ப்ரஸன்ஜீத்
23. ப்ரஸன்ஜீத்தின் மகன் - யுவான்ஷ்வா - 2
24. யுவான்ஷ்வாவின் மகன் - மன்தாத்தா
25. மன்தாத்தாவின் மகன் - அம்பரீஷா
26. அம்பரீஷாவின் மகன் - ஹரிதா
27. ஹரிதாவின் மகன் - த்ரதஸ்யு
28. த்ரதஸ்யுவின் மகன் - ஷம்பூத்
29. ஷம்பூத்வின் மகன் - அனரண்யா - 2
30. அனரண்யாவின் மகன் - த்ரஷஸ்தஸ்வா
31. த்ரஷஸ்தஸ்வாவின் மகன் - ஹர்யஷ்வா - 2
32. ஹர்யஷ்வாவின் மகன் - வஸூமான்
33. வஸூமானின் மகன் - த்ரிதன்வா
34. த்ரிதன்வாவின் மகன் - த்ரிஅருணா
35. த்ரிஅருணாவின் மகன் - திரிசங்கு
36. திரிசங்குவின் மகன் - ஹரிசந்திரன்
37. ஹரிசந்திரனின் மகன் - ரோஹிதாஷ்வா
38. ரோஹிதாஷ்வாவின் மகன் - ஹரித்
39. ஹரித்தின் மகன் - சன்சு
40. சன்சுவின் மகன் - விஜய்
41. விஜய்யின் மகன் - ருருக்
42. ருருக்கின் மகன் - வ்ருகா
43. வ்ருகாவின் மகன் - பாஹூ
44. பாஹூவின் மகன் - சாஹாரா
45. சாஹாராவின் மகன் - அசமஞ்சன்
46. அசமஞ்சனின் மகன் - அன்ஷூமன்
47. அன்ஷூமனின் மகன் - திலீபன்
48. திலீபனின் மகன் - பகீரதன்
49. பகீரதனின் மகன் - ஷ்ருத்
50. ஷ்ருத்தின் மகன் - நபக்
51. நபக்கின் மகன் - அம்பரீஷ்
52. அம்பரீஷின் மகன் - சிந்து த்வீப்
53. சிந்து த்வீப்பின் மகன் - ப்ரதயு
54. ப்ரதயுவின் மகன் - ஸ்ருது பர்ணா
55. ஸ்ருது பர்ணாவின் மகன் - சர்வகாமா - 1
56. சர்வகாமாவின் மகன் - ஸூதஸ்
57. ஸூதஸின் மகன் - மித்ரஷா
58. மித்ரஷாவின் மகன் - சர்வகாமா - 2
59. சர்வகாமாவின் மகன் - அனன்ரண்யா - 3
60. அனன்ரண்யாவின் மகன் - நிக்னா
61. நிக்னாவின் மகன் - ரகு - 1
62. ரகுவின் மகன் - துலிது
63. துலிதுவின் மகன் - கட்வாங் திலீபன்
64. கட்வாங் திலீபனின் மகன் - ரகு - 2
65. ரகுவின் மகன் - அஜன்
66. அஜனின் மகன் - தசரதன்
67. தசரதனின் மகன்
68. ஸ்ரீ ரகு ராமன்

இப்படி 68 பரம்பரை கொண்டது ஸ்ரீ ராமரின் தலைமுறை. ஸ்ரீ ராமரின் குல வம்சத்தை பற்றி அறிவதே பெரும் புண்ணியம்.



# செங்கோல்

சோழநாட்டில் உள்ள மூவர் (அப்பர், சுந்தரர், சம்பந்தர்) பாடல் பெற்ற திருத்தலம் திருசோற்றுத்துறை.

இங்கு காலம் காலமாக தினமும் இரவு நடைபெற்று வரும் பள்ளியறை பூஜையில் இறைவனை அரசராக பாவித்து நந்தியம்பெருமான் உருவம் பதித்த செங்கோல் ஏந்தி, திருசோற்றுத்துறை நாயகன் பள்ளியறை பூஜைக்கு அழைத்து செல்லப்படுகிறார்.

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

# "ராமா" நீ உன் பெயரைக் காப்பாற்றிக் கொள்ள விழைந்தால் என்னுயிரைக் காப்பாற்று

1943ம் வருடம் கும்பகோணத்தை அடுத்த திருவிடைமருதூரில் "ஆசுகவி சார்வபௌமர்" என்று போற்றப்படும் வடமொழிக் கவிச் சக்ரவர்த்தியான வில்லூர் ஸ்ரீநிதி சுவாமி வாழ்ந்து வந்தார். அவர் வடுவூர் ராமனின் மேல் பேரன்பும் பக்தியும் கொண்டவர்.

அம்மை நோயால் பலர் மடிந்து வந்த அக்காலக்கட்டத்தில் ஸ்ரீநிதி சுவாமிக்கும் அம்மை நோய் ஏற்பட்டது. மருத்துவர் வந்து பரிசோதித்துப் பார்த்து விட்டு அவரது மனைவியிடம் "இன்று இரவைத் தாண்டுவதே கடினம் என்னை மன்னித்துவிடுங்கள்," என்று சொல்லி விட்டுச் சென்றார். அன்று இரவு அவரது வாழ்க்கையின் இறுதி இரவு என்றே நிச்சயித்த அந்த இரவில் ஸ்ரீநிதி சுவாமி தன் இஷ்ட தெய்வமான ராமனிடம் வேண்டினார்.

"ராமா" என் உயிர் போவதைப் பற்றி நான் கவலைப்படவில்லை ஏனெனில் உடலை நீத்தவுடன் நான் வைகுந்தத்தை அடையப் போவது நிச்சயம். ஆனால், முப்பதே வயதில் நான் மாண்டு போனால் என் தெய்வமான உனக்கன்றோ அவப்பெயர் ஏற்படும். ராமன் ஏன் அந்த அடியவனைக் காக்கவில்லை என உலகம் உன்னைப் பழித்துப் பேசுமே.

அதனால் "ராமா நீ உன் பெயரைக் காப்பாற்றிக் கொள்ள விழைந்தால் என்னுயிரைக் காப்பாற்று" என்று சொன்ன அவர் அன்று இரவு நான்கே ஸ்லோகங்களில் முழு ராமாயணத்தையும் எழுதினார். முதல் ஸலோகத்தில் ராமன் பிறந்தது முதல் சீதா கல்யாணம் வரை, இரண்டாம் ஸ்லோகத்தில் பரசுராமரை வீழ்த்தியது முதல் சுக்ரீவ பட்டாபிஷேகம் வரை, மூன்றாம் ஸ்லோகத்தில் அனுமனின் தூது முதல் ராவண வதம் வரை, இறுதி ஸ்லோகத்தில் ராம பட்டாபிஷேகத்தைச் சொல்லி "அந்த ஜானகி ராமன் எப்போதும் என்னுடன் இருக்கையில் நான் எதற்கும் அஞ்ச மாட்டேன்", என்று சொல்லி நிறைவு செய்தார்.

அடுத்த நாள் காலை அவரைப் பரிசோதித்த மருத்துவர், அவரது மனைவியை அழைத்து, "அம்மா என்ன அதிசயம் இவர் நன்கு குணமடையத் தொடங்கி விட்டார்" என்றார். ராமனின் அருளால் வெகு சில நாட்களிலேயே அவர் பூரணமாகக் குணமடைந்தார். மஞ்சு ராமாயணம் என்றும் மந்தஸ்மித ராமாயணம் என்றும் மேலும் இரண்டு ராமாயணங்கள் எழுதினார்.

1986-ம் வருடம் இந்தியக் குடியரசுத் தலைவர் அவருக்கு வடமொழி இலக்கியத்துக்கான சிறப்பு விருதும் வழங்கினார். சுமார் 90 வயது வரை நல் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து பற்பல ஸ்தோத்திரங்களை இயற்றினார்.

அம்மை நோயால் தவித்த அந்த இரவில் அவர் எழுதிய நான்கு ஸ்லோகங்கள் கொண்ட ராமாயணம் "சதுஸ்லோகீ ராமாயணம்" என்றழைக்கப்பட்டது. அந்த 5 ஸ்லோகங்களையும் வாசித்து இன்று உள்ள கடுமையான உயிர்க்கொல்லி நோயிலிருந்து நம்மை ராமன் காத்தருள்வான்.

**ராம ஜனனம் முதல் ஸீதா கல்யாணம் வரை**

ராம : கௌசிகம் அன்வகாத் பதிமுனேர் வாசா வதீத் தாடகாம்
ஸத்ரம் தஸ்ய ரரக்ஷ தேன கதிதா : ஸூச்ராவதாஸ்தா : கதா :
கத்வாதோ மிதிலாம் விதாய த்ருஷதம் யோஷிந்மணிம் ஸந்முநே :
பங்க்த்வா தூர்ஜடி சாபமாப ரமணீம் ஸீதாபிதானாமபி

**பரசுராமரை வெல்வது முதல் சுக்ரீவ பட்டாபிஷேகம் வரை**

ஸீதாயா : கரலாலனேன ஸ க்ருதி ஜித்வா முனிம் பார்கவம்
ஸாகேதம் தரஸா ப்ரவிச்ய ஜனனீம் ஆனந்தயன் மத்யமாம்
ஆஸீத் யோ விபினே சதுர்தச ஸமா ரக்ஷன் முனீன் ஆனதான்
ரக்ஷஸ்ஸங்கம் அதாவதீத் அகடயத் ராஜ்யம் ச ஸூர்யாத்மஜே

**அநுமன் தூது செல்வது முதல் ராவண வதம் வரை**

வாயோராத்ம புவா ததோ ஹநூமதா பாதோதி பார ஸ்திதாம்
ப்ராணேப்யோபி கரீயஸீம் ப்ரியதமாம் விஜ்ஞாய ரக்ஷோ ஹ்ருதாம்
ஸேதும் வாரிநிதௌ விதாய விவிதானந்தாக வித்வம்ஸனம்
லங்காயாம் விலுலாவ ராவண சிரோ ப்ருந்தானி வந்தேய தம்

**சீதா ராம பட்டாபிஷேகம்**

ஆருஹ்யாத விபீஷணேன ஸூபகம் பக்த்யா ஸமா வேதிதம்
மான்ய புஷ்பகம் அஞ்ஜஸா நிஜபுரீம் ஆகத்ய மித்ரைர் வ்ருத :
ஆனந்தாய வஸிஷ்ட காச்யப முகை : பட்டாபிஷிக்தோ விபு :
தஸ்மின் ஜாக்ரதி ஜானகீ ப்ரியதமே கா நாம பீதிர் மம

**இந்த ஸ்தோத்திரத்தின் பலன்**

தநுஷ்கர சதுச்ச்லோகீ தநுஷ்புர கவீரிதா
மாரீகாதர சித்தானாம் மாரீதிமிதராம் திசேத்

கலியுகத்திலும் ராமாயணம் நான்கே ஸ்லோகங்களில் சொன்னாலும் ராமாயணம் உயிர் காக்கும் மருந்தாக விளங்கும் என்பதை ஸ்ரீநிதி சுவாமியின் உயிரை ராமன் காத்த இச்சரித்திரம் நமக்கு உணர்த்துகிறது.

எனவே தன் அடியார்கள் விரும்பும் பலன் எதுவாக இருந்தாலும் இம்மைக்கான பலனாக இருந்தாலும் சரி, மறுமைக்கானதாக இருந்தாலும் சரி அவற்றைத் தந்தருள்பவராகத் திருமால் விளங்குவதால் ஸர்வாதிஹி என்றழைக்கப்படுகிறார்.

அதுவே விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தின் 100 வது திருநாமம் "ஸர்வாதயே நம" என்று தினமும் சொல்லிவரும் அன்பர்கள் அனைவர்க்கும் தர்மத்துக்கு விரோதமின்றி விரும்பும் அனைத்துப் பலன்களையும் திருமால் தந்தருள்வார்.

சர்வம் ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணம்

# வேத அர்த்தம் சொல்பவனுக்கு தெரியாவிட்டாலும் உரிய தேவதைகளுக்குத் தெரியும்

வேத சப்தத்தை உச்சாரணம் பண்ணுவது எப்படி தபஸோ அப்படியே கேட்பதும். வேதம் சொன்னால் புரியாது, புரியாத வேதத்தைக் கேட்க வேண்டும் என்ற எண்ணம் வருவதே பெரிய ஏற்றம். வேத சப்தம் நம்மை கேட்கப் பண்ணுகிறது.

**அதர்வண வேதம் சொல்கிறது**

இங்கிருந்து ஒருவர் கோவிலுக்குப் போய் பகவானைச் சேவிக்கிறார். பகவான் இவரைப் பார்த்தாரா என்று எப்படி தெரிந்து கொள்வது?

பகவான் இவரை அனுக்ரஹித்தானா என்பதற்கு வேதம் ஒரு அளவுகோல் சொல்கிறது. ஓரிடத்தில் வேத பாராயணம் நடக்கிறது வேத சப்தத்தைக்கேட்டு அங்கே போய் அவர் உட்கார்ந்து கண்ணை மூடிக்கொண்டு கேட்கிறார்.

**வேதம் சொல்கிறது**

எப்போது வேதத்தைக் கேட்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டு வேத பாராயணத்தைக் கேட்கிறாரோ அப்போது பகவான் அவரைப் பார்த்து விட்டான் என அர்த்தம்.

**பகவான் பார்த்தான் என்பதற்கு அளவுகோல் ஏது?**

வேதத்தைக் கேட்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுதல். வேதத்தைக் கேட்க ஒருத்தருக்குப் பிடிக்கவில்லை என்றால் இன்னும் பகவானின் கடாக்ஷம் அவனுக்கு கிடைக்கவில்லை என்று அர்த்தம்.

பகவானிடத்தில் த்வேஷம் இருந்தால் கூட அவன் பொறுத்துக்கொள்வான். வேதத்தின் மீது த்வேஷம் இருந்தால் ஒத்துக் கொள்ள மாட்டான். நாம் வேதத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும்.

ந்ருஸிம்ஹ அவதாரத்தின் முன்பு பகவான் சொன்னான் "யதா வேதேஷு" என்று எவன் வேதத்தை நிந்திக்கிறானோ அவன் சீக்கிரம் நாசத்தை அடைவான் என்றான்.

அர்த்தம் தெரியாவிட்டாலும் வேதத்தைக் கேட்க வேண்டும். கேட்க வேண்டும் என்ற அபிப்ராயம் நமக்கு வேண்டும்.

வேத மந்திரங்களுக்கு அர்த்தம் தெரியாமல் ஒருவர் ஹோமம் பண்ணுகிறார். அப்போது பலன் சித்திக்குமா என்றால் சித்திக்கும் என்கிறது வேதம். ப்ரம்மச்சாரி உபநயனத்தின் போது பிக்ஷாடணம் (பிச்சை) எடுக்கக் கற்றுக் கொள்கிறான்.

அதற்கு அவனுக்குச் சொல்லிக் கொடுக்கப் படுகிறது. ஒவ்வொரு வீட்டின் முன்பும் "பவதி பிக்ஷாந்தேஹி" என்கிறான்.

இவனுக்கு சமஸ்கிருத பாடம் ஆரம்பிக்கவில்லை. ராம சப்தம் கூட தெரியாது. "தாங்கள் பிச்சை இடுங்கள்" என்ற அர்த்தமும் தெரியாது.

ஆனால் அதை சொல்லக் கற்றுக் கொண்டுள்ளான். அவனுக்கு என்ன தெரியும்..."

"பவதீ பிக்ஷாந்தேஹி" என்று கூக்குரலிட்டால் பாத்திரம் நிறையும் வீட்டுக் கதவைத்திறந்து வந்து அந்த வீட்டுப் பெண்மணி பாத்திரத்தில் அரிசியை இடுகிறாள். பாத்திரம் நிறைகிறது. ப்ரம்மச்சாரி அர்த்தம் தெரியாமல் சொல்கிறான். ஆனாலும் பாத்திரம் எப்படி நிறைகிறது என்றால், இவனுக்குத் தெரியாமல் போனாலும் வீட்டில் உள்ளவர்களுக்குத் தெரியும்.

அது போல், வேத மந்திரத்திற்கு நமக்கு அர்த்தம் தெரியாவிட்டாலும் தேவதைகளுக்குத் தெரியுமாதலினால் அவர்கள் ஓடி வந்து நாம் கொடுப்பதை ஸ்வீகரித்து நம்முடைய வேண்டுதலை பூர்த்தி பண்ணுவார்கள்.

---

# மகா பெரியவாளின் பத்து கட்டளைகள்

1. காலையில் எழுந்தவுடன் இரண்டு நிமிடங்களாவது கடவுளை மனதில் நினைத்து பிரார்த்தனை செய்

2. அன்றைய தினம் நல்ல தினமாக இருக்க கடவுளை வேண்டிக்கொள்

3. அடுத்து புண்ணிய நதிகள், கோமாதா, சிரஞ்சீவிகள், சப்த கன்னியர்கள் முதலியவர்களை குறைந்தபட்சம் ஒரு நிமிடமாவது நினை

4. வாரத்தில் ஒரு நாளாவது அருகிலுள்ள திருக்கோயிலுக்குச் சென்று கடவுளை வழிபடு

5. உன் பக்கத்தில் வாழ்பவர்களையும், மற்றவர்களையும் நேசி

6. சாப்பிடும் முன் மிருகங்களுக்கோ, பட்சிகளுக்கோ ஆகாரம் அளித்துவிட்டு பிறகு சாப்பிடு

7 அன்றாடம் குறைந்தபட்சம் சக்திக்கேற்றபடி தர்மம் செய்

8 நெற்றியில் தவறாது திலகம் வைத்துக் கொள்

9. உறங்கச் செல்லுவதற்கு முன் அன்றைய நாளில் நீ செய்த நல்லது, கெட்டதுகளை எண்ணிப் பார்

10. ஆண்டவன் நாமத்தை 108 முறை உச்சரித்துவிட்டு பின்பு உறங்கு

# பஞ்ச பூத தலங்கள்



நீர், நிலம், ஆகாயம், நெருப்பு, காற்று ஆகிய ஐந்தையும் பஞ்ச பூதங்கள் என்கிறோம். நமது உடலின் இயக்கத்திற்கு பஞ்ச பூதங்களின் இயக்கம் இன்றியமையாதது. உலகிலுள்ள அனைத்து உயிர்களும், பொருள்களும் இவற்றில் ஐந்தும் கலந்தோ அல்லது சிலவற்றைக் கொண்டோ உருவாகியிருக்கிறது. சிவபெருமான் கோவில் கொண்டுள்ள தலங்களில் முக்கியமாக கருதப்படுவது பஞ்ச பூத தலங்களான காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிதம்பரம், திருவானைக்கால் மற்றும் காளகஸ்தி திருத்தலங்களாகும்.

பஞ்ச பூத தலங்கள் என்றால் நமது நினைவில் தோன்றுவதும் இத்திருத்தலங்கள் தான். நீர்-திருவானைக்கால், நிலம்-காஞ்சிபுரம், ஆகாயம் - சிதம்பரம், நெருப்பு - திருவண்ணாமலை, காற்று - காளஹஸ்தி. இப் பஞ்ச பூத தலங்கள் பற்றி நாம் அறிவோம். ஆனால் சென்னை மற்றும் மதுரை உள்ளிட்ட ஊர்களிலும் பஞ்ச பூதங்களின் வடிவாக கோவில் கொண்டு சிவபெருமான் அருள் பாலிக்கிறார். இத் தலங்களில் வழிபட்டாலும் பஞ்ச பூத தலங்களில் வழிபட்ட பலன் முழுமையாக கிடைக்கும். அறியாத இத் தலங்களை பற்றி நாம் அறிந்து கொள்வோம்.

**சென்னை நகரில் உள்ள பஞ்ச பூத தலங்கள் :**

**1. நீர்** - ஸ்ரீ கங்காதீஸ்வரர் கோவில் அமைந்துள்ள இடம் புரசைவாக்கம்.

**2. நிலம்** - ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர் கோவில் அமைந்துள்ள இடம் - தங்கசாலை (மின்ட்).

**3. ஆகாயம்** - ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் கோவில் அமைந்துள்ள இடம் - சூளை.

**4. நெருப்பு** - ஸ்ரீ அருணாசலேஸ்வரர் கோவில் அமைந்துள்ள இடம் - சௌகார்பேட்டை.

**5. காற்று** - ஸ்ரீ காளஹஸ்தீஸ்வரர் கோவில் அமைந்துள்ள இடம் - பாரிமுனையாகும்.

இத்தலங்கள் நவக்கிரக பரிகார தலமாகவும் விளங்குகிறது. இத் தலங்கள் அனைத்தையும் நான்கு அல்லது ஐந்து மணி நேரத்திலேயே சென்றடையக் கூடிய தூரத்தில் இருப்பதால் ஒரே நாளில் சென்னையிலுள்ள பஞ்ச பூத தலங்களுக்கு

சென்று நாம் வழிபட்டு வர முடியும்.

**மதுரையிலுள்ள பஞ்ச பூத தலங்கள் :**

**1. நீர் :** திருவாப்புடையார் கோவில் இத்தலமானது மீனாட்சி அம்மன் கோவிலுக்கு வடக்கில் செல்லூர் எனும் பகுதியில் வைகை நதிக்கு அருகில் அமைந்துள்ளது. இத்தலம் மதுரையில் திருஞானசம்பந்தர் பாடிய 2-வது தலம் என்றும், பாண்டிய மன்னரால் கட்டப்பட்ட நான்காவது கோவில் என்றும் போற்றப்படுகிறது. இவரை வணங்கினால் பிற புண்ணிய தலங்களின் ஈசனை வணங்கிய பலன் கிடைக்கும் என்கிறது ஸ்தல புராணம். அம்பாளின் திருநாமம் ஸ்ரீ சுகந்த குந்தளாம்பிகை ஆவார்.

**2. நிலம் :** இம்மையில் நன்மை தருவார் கோவில் மதுரையின் மைய பகுதியில் தெற்கு மாசி வீதியும், மேல மாசி வீதியும் இணையும் இடத்தில் அமைந்துள்ளது. இங்கு அம்மையப்பன் அமர்ந்த கோலத்தில் மேற்கு நேக்கி அருள் பாலிக்கிறார்கள். இத்தலம் "பூலோக கைலாயம்" எனவும் அழைக்கப்படுகிறது. மூலவராக சொக்கநாதரும், மத்தியபுரி நாயகியாக அம்பாளும் உள்ளனர். இப்பிறப்பில் செய்த பாவங்களை இத்தலத்து சிவன் இப் பிறவியிலேயே மன்னித்து நன்மை தருவதால் "இன்மையிலும் நன்மை தருவார்" என்று அழைக்கிறார்கள். இத்தல அம்பாளுக்கு "மாங்கல்ய வரபிரசாதினி" என்ற பெயரும் உண்டு. இக்கோவில் நிலம் (பூமி)தலம் என்பதால் புது கட்டிடம் கட்டத் துவங்குபவர்கள் பிடி மண்ணை எடுத்து வந்து இங்கே வழிபட்டு செல்வது வழக்கமாகும்.

**3. ஆகாயம் :** சிம்மக்கல் பழைய சொக்கநாதர் கோவில் மதுரை சிம்மக்கல் பகுதியில் அமைந்துள்ளது. குபேரன் தன்னிடத்திலுள்ள செல்வம் மேன் மேலும் பெருக சொக்கநாதரை வழிபட்டு, பிரதிஷ்டை செய்ததே ஆதி சொக்கநாதர் என்பது மக்களின் நம்பிக்கை. இத்தலம் புதன் சேத்திரமாகவும் விளங்குகிறது. இக் கோவிலை "வட திருவாலவாய்" என்றும் அழைப்பார்கள்.

**4. நெருப்பு :** தென் திருவாலவாயர் கோவில் இக்கோவில் மதுரை தெற்கு மாசி வீதியில் அமைந்துள்ளது. மீனாட்சி அம்மன் உடனுறை சிவபெருமான் கோவில். இத்தலத்து சிவன் அளவில் பெரியவர். தெற்கு திசைக்குத் தலைவனான எமன் வழிபட்ட தலம். திருவிளையாடல் புராண கதைகளில் ஒன்றான மதுரைக்கு எல்லை காட்டிய படலம் நிகழப் பெற்ற கோவில் இதுவேயாகும். மருத்துவர்களால் கைவிடப்பட்டவர்கள் கூட இத்தலத்து ஈசன் அருளால் குணமடைந்து உடல் நலம் பெறுகின்ற அதிசய கோவில் என அடியவர்களால் போற்றப்படுகிறது.

**5. காற்று :** முக்தீஸ்வரர் கோவில் மதுரை வண்டியூர் மாரியம்மன் தெப்பகுளத்தின் மேற்கு பகுதியில் உள்ளது. வாயு ஸ்தலமான முக்தீஸ்வரர் கோவில். இறைவன் முக்தீஸ்வரர் அம்பாள் ஸ்ரீ மரகதவல்லியுடன் காட்சி தருகிறார். இக் கோவிலில் ஒரே இடத்தில் நின்று அம்மையையும், அப்பனையும் தரிசிக்கலாம். கர்மவினை தீர இத்தல இறைவனை வேண்டிக் கொண்டால் உடன் நற்பலன் கிட்டும் என்பது நம்பிக்கை.

நமது அக இருளை அகற்றி வாழ்வில் பிரகாசிப்பதற்காக நமக்கு அருகேயே கோவில் கொண்டு அருள் மழை பொழிகின்ற இப் பஞ்ச பூத தலங்களை வழிபட்டு வாழ்வில் உயர் நிலை அடைவோம்.

........ ஹேமலதா க்ருஷ்ணகுமார்

# KRISHNA DELISH COFFEE

KRISHNA DELISH COFFEE
GREAT TASTE




## எங்களிடம் தரமான காபி
## கொட்டை அரைத்து தரப்படும்
## 1 கிலோ காபி பவுடர்
## ரூ 920 மட்டுமே

அனைவருக்கும் இனிய
தமிழ்
புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்

* Condition Apply

---

## நம்ம ஆத்து காபி
## FILTER COFFEE RS. 20 only

**COFFEE POWDER DOOR DELIVERY FREE ALSO AVAILABLE**

No. 1 & 2 Murthy Street,
Arya Gowda Road, West Mambalam,
Next to Ayodhya Mandabam. Ch-33.

Ph : 9941578181
7010878478

# இனிய
# தமிழ் புத்தாண்டு
# நல்வாழ்த்துக்கள்

Mylapore Ganapathy's Celebrating 83 Years Anniversary Since 1942

மயிலாப்பூர்
## கணபதிஸ்®
ஸ்தாபிதம் 1942

## வெண்ணெய் & நெய்

### பாரம்பரியமாக 1942 முதல்

ஊத்துக்குளி வெண்ணெய் • ஊத்துக்குளி நெய்
மர செக்கு எண்ணெய் • அப்பளம் வகைகள் • பொடிகள்
உடனடி மிக்ஸ் • ஊறுகாய் வகைகள் • தொக்கு வகைகள்
இனிப்பு வகைகள் • கார வகைகள் • வடாம் • வத்தல்
உலர் பழங்கள் • ஸ்பைசஸ் • பேக்கரி வகைகள்
ஊர் ஸ்பெஷல்ஸ் • சீர் பட்சணம்

**மயிலாப்பூர் கிளை :**
# 14, சித்திரைக்குளம் மேற்கு தெரு,
[பி. கே. மஹால் கல்யாண மண்டபம் அருகில்]
மயிலாப்பூர், சென்னை - 600 004
போன் : 044 - 2464 0292, 89390 27272

**மேற்கு மாம்பலம் கிளை :**
# 50, ஆர்ய கவுடா ரோடு,
[ ஷோபனா கல்யாண மண்டபம் அருகில்]
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033
போன் : 044 - 4856 6363, 89390 36363

கருத்துக்களை தெரிவிக்க : 044 – 4856 6781 | வாட்ஸ் அப் : 73581 56781
மின்னஞ்சல் : info@mylaporeganapathys.com
ஆன்லைன் ஆர்டர்கள் www.mylaporeganapathys.com